பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 07 சனிக்கிழமை 21.06.2025 கதிர் 224

## புதிதாகச் சட்டங்களை இயற்றியாவது கெஹலியவைத் தண்டிக்கவேண்டும்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கெஹெலிய ரம்புக்வெல்ல தேசிய குற்றமிழைத்திருக்கின்றார். நடைமுறையிலுள்ள சட்டங்கள் அவருக்கு தண்டனை வழங்குவதற்கு போதாவிட்டால்,புதியசட்டமியற்றியேனும் நீதியை நிலைநாட்ட வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்புதேசியவைத்தியசாலையில் நேற்றுஇடம்பெற்றநிகழ்வொன்றில்கலந்து கொண்டதன்பின்னர்செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கெஹெலிய ரம்புக்வெல்ல தேசிய குற்றமிழைத்திருக்கின்றார். அவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் போதாவிட்டால், புதிதாக சட்டமியற்றியேனும் தண்டனை வழங்கப்படவேண்டும்.

அவரது செயற்பாடுகளால் பல உயிர்கள் பறிபோயிருக்கின்றன. மருந்தின் மீதிருந்த நம்பிக்கையால் விசேட வைத்திய நிபுணர்கள்கூட நோயாளர்களுக்கு குறித்த மருந்துகளை ☞ 6

## யானைகள் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண அரச தலைவர் வலியுறுத்து

கிராமப்புற பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்க்கையிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திவரும்காட்டுயானைப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முறையான பொறிமுறையை உடனடியாக செயல்படுத்துமாறு அரசதலைவர் அனுரகுமார திசாநாயக்க சம்பந்தப்பட்ட ☞ 6

## இது இனி ரகசியம் அல்ல!

சில பல மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தையே பரபரப்பாக்கியவிடயம்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் ☞ 2

## நிதி துணை அமைச்சர் ஹர்ஷன நேற்று திடீரென பதவி விலகல்

### திறைசேரியின் செயலாளராகிறார்?

நிதிமற்றும்திட்டமிடல்துணைஅமைச்சர்டாக்டர் ஹர்ஷன சூரியப்பெரும அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளதுடனன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தார்.

அவர்தனதுபதவிவிலகல்கடிதத்தைசபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளித்துள்ளார் ☞ 6

## இணுவிலில் குப்பையை கொட்ட நல்லூர் பிரதேச சபைக்குத் தடை

இணுவில், காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகாமையில்நல்லூர்பிரதேசசபையினால்திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதற்கு யாழ்ப்பாணம் ☞ 6

### வடக்கில் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி தொடர்பாக

# ஆளும்தரப்பு தன் வாக்குறுதியை நிறைவேற்றத் தயங்குவது ஏன்?

### சுமந்திரன் கேள்வி

வடக்கிலுள்ளகாணிகள்தொடர்பில்வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து அரசின் முடிவைஅறிவிப்பதற்குமீண்டும்காலஅவகாசம் கேட்டிருக்கிறார் சட்டமா அதிபர்.

வர்த்தமானியில்குறிப்பிடப்பட்டுள்ளமூன்றுமாத காலஅவகாசம்ஜூன்28முடிவுறவுள்ளநிலையில், அதற்கு ஒரு நாள் முன்பாக, ஜூன் 27 வரை கால அவகாசம் வழங்குமாறு உயர்நீதிமன்றத்திடம் சட்டமா அதிபர் கோரியிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன், இந்த வர்த்தமானியை மீளக் கைவாங்குவதாக ஆளும்தரப்பு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அது ஏன் தயங்குகின்றது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

வட மாகாண மொத்தமாக 5,940 ஏக்கர் ☞ 2

### ஐ.நா. ஆணையரின் கவனத்தை ஈர்க்கும் வகையில்

## செம்மணியில் 3 நாள்கள் தொடர் 'அணையா விளக்கு' போராட்டம்

### மக்களை அணி திரளுமாறு அழைப்பு

யாழ். செம்மணி சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின்கவனத்தைஈர்க்கும் வகையில் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு 'அணையா விளக்கு' போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'மக்கள்செயல்' என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் ஜூன் 23 தொடக்கம் 25 வரையில் செம்மணி வளைவுப் பகுதியில்இந்தப்போராட்டம்தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கை ☞ 2

## ஜூன் 30 நாடாளுமன்ற சிறப்பு கூட்டம்

நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வை ஜூன் 30 கூட்டுவது என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரக் குழுவில் முடிவு செய்யப்பட்டது. ☞ 6

## நாடாளுமன்ற பணியாளர்களின் உணவுக் கட்டணம் மீள குறைப்பு

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான நாடாளுமன்றக்குழுநேற்றுநாடாளுமன்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் மாதாந்திர உணவுக் கட்டணத்தைக் குறைக்க முடிவு செய்தது, இந்தக் கட்டணங்கள் சமீபத்தில்தான் ☞ 2

## வாகரைப் பிரதேச சபை கிழக்கு கூட்டமைப்பு வசம்

### பிள்ளையான் தரப்புக்கு என்பிபி ஆதரவு

மட்டக்களப்பு வாகரை பிரதேச சபையை பிள்ளையான் தலைமையிலான கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு நேற்றுக் கைப்பற்றியுள்ளது. அதற்கு ஆதரவாக 12 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. கொழும்பில் ஆளும் என்பிபியும் பிள்ளையான் தரப்புக்கு ஆதரவளித்தது.

அதனை எதிரத்துப் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவாக 7 வாக்குகள் மட்டுமே கிடைக்கப் பெற்றன.

முன்னதாக, மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை ☞ 6

## தமிழ் மக்களை என்பிபி ஒருபோதும் கைவிடாது

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

தமிழ்மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். மக்கள்எம்மைக்கைவிட்டால் கூட, மக்களுக்காகச் செய்யவேண்டியதிட்டங்களை நிச்சயம் நாம் செய்வோம் என்றுஅமைச்சர்சந்திரசேகரன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கமநல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் கமநல அபிவிருத்தித்திணைக்களத்தின் ஆணையாளர் ரோஹன ராஜபக்ச தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக விவசாயம், கால்நடை, நீர்பாசனம் ☞ 6

## வாகன இறக்குமதி மூலம் மட்டும் ரூ. 165 மில்லியன் வருமானம்

இந்த ஆண்டு பெப்ரவரியில் வாகன இறக்குமதிக்கானஅனுமதிவழங்கப்பட்டதை அடுத்து வாகன இறக்குமதி மூலம் மட்டும் ரூ. 165 பில்லியன் அல்லது ரூ. 16,500 கோடி சுங்க வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் சுங்கத்துறை கூடுதல் இயக்குநர் நாயகமுமான ☞ 6

## இனி இது .....

போதைப் பொருள் மற்றும் மாவா பாக்கு பயன்பாடு பற்றிய பிரச்சினை. இதற்கு எதிராக பகிரங்கப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து யாழ்;பபாணப் பல்கலைக்கழகத்தைச் சுத்தப்படுத்தப் போகிறார்கள் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் செய்தியாளர்கள் சந்திப்பெல்லாம் நடத்தி அறிவித்துப் பரபரப்பைக் கிளப்பினார்கள். அவர்களின் போராட்டத்திற்குத் தானும் ஆதரவு என்று பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியும் தெரிவித்தார். போதையின் பிடியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீட்கவேண்டியதன் அவசியம் பற்றியெல்லாம் அவர் பேசினார்.

இதனால் யாழ்ப்பாணம் பற்றிக்கொண்டு எரிந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றும் தமது பிள்ளைகளும்கூட போதைப் பொருள் பயன்படுத்துகிறார்களோ என்று பெற்றோர்கள் சந்தேகப்படுமளவிற்கு இந்தப் பிரச்சினை பூதாகரமாகப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக நிர்வாகம் மேற்கொண்ட ஒழுக்காற்று நடவடிக்கை முறையற்றது, உரிய முறையில் முன்னெடுக்கப்படாதது என்று பல்கலைக்கழகப் பேரவை தனது நிர்வாகத்திற்கு எதிராக எடுத்த முடிவைக் குழப்புவதற்காகக் கலைப்பீடாதிபதி தனது பதவியை துறப்பதாக ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டமையுடன் இந்தப் பிரச்சினை தொடங்கியது. ஒருபுறத்தில் அவரது பதவி விலகலை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் துணைவேந்தருக்கு எதிராக ஓர் அரசியலை நடத்தியது. அதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவரான ஜேவிபி தோழர்களின் நண்பர், இப்போது மாநகர சபை உறுப்பினராகி தோழராகவே மாறிவிட்டார் என்பது தனிக்கதை. இருந்தாலும் கலைப்பீடாதிபதியின் பதவி விலகலுடன் மாணவர்களின் போதைப் பாவனை பற்றிய பிரச்சினையும் ஊதி ஊதிப் பெருப்பிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, மாணவர்களின் பாலியல் ஒழுக்கத்தின் மீதான கேள்வியும் இதையொட்டி எழுப்பப்பட்டது. அதற்கு ஆதாரமாக வீதியில் காணப்பட்ட சில காவித் துப்பல்களின் படங்களையும் பெண்கள் உள்ளாடையின் படத்தையுமே அப்போதே காட்டினார்கள் என்பது வேறுவிடயம். இருந்தாலும் போதைப் பயன்பாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பாடாய்ப் படுத்துகின்றது என்று சமூகத்தை நம்பவைக்க ஒரு பெரு முயற்சி எடுக்கப்பட்டது.

உண்மையில் அப்படி ஒரு நிலமை இருந்தால் அது களையப்பட்டு பல்கலைக்கழகம் சுத்தப்படுத்தப்படவேண்டியது அவசியம். அதில் மாற்றுக் கருத்துக்குள் இடமில்லை. போதைப் பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டிலும், விற்ற குற்றச்சாட்டிலும் சில பல மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள் என்பது வரையில் இந்த விவகாரத்தில் உண்மையுண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவை தனிமனிதத் தவறுகளே தவிர, ஒட்டுமொத்தப் பல்கலைக்கழக மாணவர்களும் போதைக்கு அடிமையானவர்கள் அல்லது போதைப் பொருள் பயன்பாடு பல்கலைக்கழகத்தைச் சீரழிக்கிறது என்கிற அளவிற்கு அது இருக்கவில்லை. அது சில தனிமனிதர்கள் தங்கள் தவறுகளை மறைக்கவும் தமக்கு நிர்வாகம் தெரியாது என்பதை மறைக்கவும் மேற்கொண்ட மிகக் கீழ்த்தரமான முயற்சி என்பது தற்போது நிரூபணமாகியிருக்கின்றது.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போதைப் பொருள் பாவனையோடு தொடர்புபட்ட முறைப்பாடுகள் எவையும் கடந்த ஓராண்டு காலமாக கிடைக்கப் பெறவில்லை' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் தெளிவாகத் தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 'போதைப் பொருட் பாவனை' தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வழங்கியுள்ள பதிலில், தெட்டத் தெளிவாக, மிகச் சுருக்கமாக இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

போதைப் பொருள் பாவனையோ அதுசார்ந்த முறைப்பாடுகளோ கிடைக்கப் பெறவில்லை என்று பதிவாளர் பதிலளித்துள்ளார். பதிவாளரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் வருமாறு.

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள் போதைப் பொருள் பாவனையோடு தொடர்புபட்டதாக முறைப்பாடுகள் எவையேனும் பல்கலைக்கழக மாணவர்கள், கலைப்பீட மாணவர்களிற்கு எதிராக கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள் பதிவாகியுள்ளதா?

2. அவ்வாறு பதிவாகியிருப்பின் பதிவாகிய சம்பவங்கள் எத்தனை?

3. பதிவாகிய சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை?

4. பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளிற்கு தற்போது வரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

5. போதைப் பொருட்கள் எவையேனும் கைப்பற்றப்பட்டிருப்பின், கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் தற்போது யாருடைய பாதுகாப்பில் ஃ கையிருப்பில் உள்ளன?

6. போதைப் பொருள் பாவனையோடு தொடர்புடைய மாணவர்கள் மீள கற்றல் நடவடிக்கைளிற்கு திரும்புவதற்கு ஏதேனும் ஆற்றுப்படுத்தல் அல்லது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் போதைப் பொருள் பாவனையோடு சம்பந்தப்பட்ட எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை" என்று பதிவாளர் மிகத் தெளிவாகப் பதிலளித்துள்ளார். போதைப் பொருள் பயன்பாடு பற்றி பல்கலைக்கழகத்திற்கு வெளியே ஊடகங்களிடம் நீலிக்கண்ணீர் வடித்த பேராசிரியரோ, மாணவர்களோகூட இது தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளையும் செய்யவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அப்படியிருக்கும்போது எப்படி இவர்கள் போதைப் பொருளுக்கு எதிரான போராட்டத்தைப் பல்கலைக்கழகத்திற்குள் முன்னெடுக்கப்போவதாக அறிவித்தார்கள் என்பதும் ஒரு பெரும் கேள்வி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் போதைப் பொருள் பாவனை உள்ளதென்று பல்கலைக்கழக மாணவர்களின் மீது பாராதூரமான குற்றச்சாட்டினை முன்வைத்து கலைப்பீடப் பீடாதிபதி ரகுராம் 2025 ஜனவரியில் தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்று ஊடகங்களிற்குத் தெரிவித்தார். அதன் பின்னர் 6 மாதங்களிலும் பல்கலைக்கழகத்திற்குள் போதைப் பொருள் பாவனை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. அவரது பதவி விலகலுக்கு முன்னைய 6 மாதங்களிலும் அத்தகைய முறைப்பாடா-கள் எவையும் இல்லை. ஆனால், அவரது பதவி விலகலோடு ஒட்டிமட்டும் எப்படி பல்கலைக்கழகத்திற்குள் போதைப் பொருள் பயன்பாடு என்கிற விவகாரம் பூதாகாரமானது என்பது பெரும் சந்தேகத்திற்குரியதுதான். உண்மையில் யார் இந்தப் போதைப் பொருள் பயன்பாட்டின் அல்லது விற்பனையின் சூத்திரதாரிகள் என்கிற கேள்வியையும் இது எழுப்பி நிற்கின்றது.

இது முடிந்துபோன விடயம்தானே, இதையேன் இப்போது கிளறவேண்டும் என்ற கேள்வி சிலருக்கு எழலாம். இந்தப் பிரச்சினையினாலும் போதைப் பொருள் பயன்பாட்டுக் குற்றச்சாட்டாலும் மனச் சிதைவுகளுக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களுக்கு யார் நீதி வழங்குவது? அவர்கள் இப்போதும் குமுறி வருகின்றார்கள். இந்தப் பிரச்சினையில் கலைப்பீடாதிபதி ரகுராமிற்கு எதிராக ஊடகங்களில் கருத்துத் தெரிவித்தார் என்று செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சட்டத்துறை மாணவன் ஒருவர் கல்வி நடவடிக்கையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். பின்னர் அவர் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததும் அவர் மீதான தடையை அவசர அவசரமாக பல்கலைக்கழக நிர்வாகம் திரும்பப் பெற்றது. ஆனால், வீணடிக்கப்பட்ட அவரது கல்விக்கும் பாழடிக்கப்பட்ட அவரது நற்பெயருக்கும் நீதி வழங்குவது யார்? தங்கள் தேவைகளுக்காக ஒரு பல்கலைக்கழகத்தின் மீதே களங்கம் கற்பித்தவர்கள் தொடர்ந்தும் எப்படி மாணவர்களை வழிநடத்தக்கூடியவர்களாக இருக்கமுடியும்? சுயநலத்திற்காக ஒரு மாணவர் சமூகத்தின் மீது பழி சுமத்தி அவர்களைப் பகடைக்காய்களாக வைத்து அரசியல மற்றும் நிர்வாகச் சூதாட்டம் நடத்துபவர்கள்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடையாளமா? பதில் சொல்லுமா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம்?

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளை 3 மாதகாலத்துக்குள் அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தலை மார்ச் 28 ஆளும்தரப்பு விடுத்தது. காணிகளுக்கு உரிமை கோருபவர்கள் அதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இல்லையேல் ஜூன் 28 இந்தக் காணிகள் அனைத்தும் அரசுடமையாக்கப்படும் என்றும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2430/25 எனும் இலக்கத்தில் இந்த வர்த்தமானி வெளியாகியிருந்தது. இதற்குத் தமிழ் மக்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. தமிழர்களின் காணிகளை அபகரித்து, அவர்களின் நில உரிமையை மீறுகின்றது ஆளும்தரப்பு என்று அவர்கள் கொதித்தெழுந்தார்கள். அறவழிப் போராட்டங்களை நடத்தப்போவதாக தமிழ் அரசுக் கட்சி அறிவித்தது. அரசுத் தலைவர் வடக்குக்குள் நுழைய அனுமதிக்காத சட்டமறுப்புப் போராட்டங்கள் இடம்பெறும் என்றும் அது அறிவித்தது. அதேநேரம் இதனை எதிர்த்து சட்டரீதியாகவும் போராடப்படும் என்றும் தெரிவித்திருந்தது.

இதனை அடுத்து, இந்த வர்த்தமானி அறிவித்தலின் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஆளும்தரப்பு முதலில் அறிவித்தது. பின்னர் வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெறுவதற்கு அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அறிவிப்பு வெளியாகி இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கான மீள் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படவிலலை.

அதேபோன்று, வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால்காந்தவினால் ஜூன் 3 இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தனி அறிவிப்பு வெளியிடப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அதுவும நிறைவேற்றப்படவில்லை.

இதையடுத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர், அரசுத்தலைவர் சட்டத்தரணியான சுமந்திரன், இந்த வர்த்தமானி அறீவத்தலை நீக்கக் கோரி பொதுநலன் கருதும் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தார். ஜூன் 12 உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை 2430/25 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இதுபற்றி தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகப் பக்கத்தில் நேற்றுப் பதிவிட்டிருந்தார் சுமந்திரன், அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:

வடக்கில் 5940 ஏக்கர் காணிகளுக்கான தமது உரித்தை நிரூபிக்குமாறு காணி நிர்ணயச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் ஜூன் 28 முடிவடைகின்றது. அவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தி சட்டமறுப்புப்போராட்டத்தை நடாத்துவது குறித்து நாம் வழங்கிய காலக்கெடு முடிவடைவதற்கு ஒருநாள் இருக்கையில், அதனை மீளப்பெறப்போவதாகக் மே 27 அரசு அறிவித்தது. அவ்வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றப்படும் என நாம் எதிர்பார்த்தோம். ஆனால் இரண்டு வாரங்கள் கடந்தும் இவ்வர்த்தமானி அறிவித்தல் இரத்துச்செய்யப்படாததன் காரணமாக, அதுகுறித்து ஜூன் 12 உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்தேன்.

கடந்த செவ்வாயன்று இவ்வழக்கு ஆதரிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அமைச்சரவையின் அறிவுறுத்தலைப் பெறுவதற்கு சட்டமா அதிபர் ஜூன் 20 வரை (நேற்று) கால அவகாசம் கோரியிருந்தார். அதனையடுத்து நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசின் முடிவை அறிவிப்பதற்கு ஜூன் 27 வரை மீண்டும் கால அவகாசம் கோரியிருக்கிறார்.

இது மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலக்கெடு முடிவடைவதற்கு ஒருநாள் அவகாசத்தை மாத்திரமே கொண்டிருக்கிறது. அவ்வாறெனில், இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தாம் தீர்மானித்திருப்பதாகக் கூறியதை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு தயங்குவது ஏன்?" என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று 'மக்கள் செயல்' அமைப்பினர் தெரிவித்தனர்.

1995ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு வரையில் செம்மணிப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டுள்ள போதிலும், அது குறித்த மர்மம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகின்றது.

இனவழிப்புக்கு ஆதாரமான இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணமோ, இதற்கு அதிகாரம் வழங்கிய தரப்புக்கள் யார் என்பதோ, மீளவும் இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்படாது என்பதற்கான பொறுப்புக்கூறலோ வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்துக்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும் என்கின்ற குறியீட்டு அர்த்தத்தில் இந்தப் போராட்டத் தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக்கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டம் இடம்பெறும் மூன்று தினங்களில், முதல் இரண்டு நாள்களிலும் சுழற்சி முறையிலான அடையாளப் பட்டினிப் போராட்டமும், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செய்திப் படக் கண்காட்சியும், மக்கள் கையெழுத்துத் திரட்டலும், செம்மணி மனிதப் புதைகுழியோடு தொடர்புபட்ட கதை, கவிதை படிப்பும், நாடக அளிக்கையும் இடம்பெறவுள்ளன.

ஜூன் 25, - மூன்றாம் நாள் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. போராட்டத்தின் இறுதி நாளன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் வோல்கர் டர்க் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலை யில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி மாத்திரமல்லாது வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாக இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் அதிகளவில் பொது மக்களை இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்பட்டது.

அதன்படி, நாடாளுமன்ற நிர்வாக அதிகாரிகளின் மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.4,000 இலிருந்து ரூ. 3,000 ஆகவும், பொது ஊழியர்களின் மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.2,500 இலிருந்து ரூ.2,000 ஆகவும் குறைக்கப்படும்.

நாடாளுமன்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் உணவுக் கட்டணம் திருத்தப்படுவது இது சமீபத்திய காலங்களில் மூன்றாவது முறையாகும்.

அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் வேண்டுகோளின் பேரில் விலைகள் இவ்வாறு குறைக்கப்பட்டதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தின் மாதாந்திர உணவுக் கட்டணம் கட்டுப்படியாகாது என்று கூறி, அனைத்துக் கொடுப்பனவுகளும் குறைக்கப்படும் வரையில் நாடாளுமன்ற சாப்பாட்டு மண்டபத்திலிருந்து சாப்பிட மாட்டோம் என்று தெரிவித்து நாடாளுமன்ற ஊழியர்கள் குழு சமீபத்தில் நாடாளுமன்றத் தலைவர்களிடம் ஒரு கடிதத்தை ஒப்படைத்தது. இதனையடுத்தே கட்டணத்தைக் குறைக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்திர உணவுக் கட்டணமும் சமீபத்தில் அதிகரிக்கப்பட்டது.

## யானைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

காட்டுயானைப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து நேற்றுப் பிற்பகல் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# கேள்வி கோரலே இல்லாமல் வீதி அபிவிருத்தித் திட்டங்கள்

## தென் மாகாணத்தில் இப்படியும் மோசடி

வடமத்திய மாகாணத்தில் ரூ.293 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள 629 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் கேள்வி கோரல்களே (டெண்டர்கள்) இல்லாமல் ஒரு ஒப்பந்ததாரருக்கு சட்டவிரோதமாக வழங்கப்பட்டதாக பொதுக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழு (ளீநுஊணபு) வெளிப்படுத்தியது.

நாட்டின் அப்பாவிகளின் வரிப் பணத்தை மோசடி செய்வது ஒரு சோகம் என்றும், இது சாலை மேம்பாட்டு வரலாற்றில் மிகப்பெரிய மோசடி என்றும் குழுவின் தலைவர் அரவிந்த செனரத் கூறினார்.

வடமத்திய மாகாண சபை 2011 ஆம் ஆண்டில் ஐம்பத்து மூன்று சாலைகளை ரூ.170 மில்லியனுக்கும் அதிகமான மதிப்பீட்டில் புதுப்பித்தது. சுமார் ரூ.10 மில்லியன் செலவாகும் ஒரு கிலோமீற்றர் சாலைக்கு சுமார் ரூ.45 மில்லியன் செலவிடப்பட்டதாகவும் குழு கூறியது.

இவ்வளவு பணம் செலவழித்த போதிலும், தரமற்ற கட்டுமானம் காரணமாக சாலைகள் குறுகிய காலத்தில் பாழடைந்துவிட்டன என்பதும் தெரியவந்தது.

இதற்கிடையில், ரூ.100 மில்லியன் மதிப்புள்ள ஆடிட்டோரியத்தை கட்டுவதற்கு முன்பணமாக ரூ.100 மில்லியன் செலுத்தப்பட்டதாக குழு வெளிப்படுத்தியது. 500க்கும் குறைவான குழந்தைகளைக் கொண்ட ஒரு பள்ளிக்கு 540 மில்லியன் ரூபாய் வீணடிக்கப்பட்டுள்ளது, மேலும் அந்தப் பள்ளி இப்போது ஒரு பாழடைந்த நிலமாக மாறிவிட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் வடமத்திய மாகாண சபையின் தற்போதைய செயல்திறன் குறித்து விவாதிக்க, அரசாங்கக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் கூடியபோது இந்தத் தகவல் தெரியவந்தது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமத்திய மாகாணத்தின் தலைமைச் செயலாளர் மற்றும் தலைவர்கள் குழுவும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# முன்னாள் காதலியின் நிர்வாண படத்தைப் பகிர்ந்த ஒருவர் கைது

நான்கு வருடங்களாக உறவில் இருந்த பல்கலைக்கழக மாணவியான இளம் பெண் தன்னுடனான உறவை முறித்துக் கொண்டார் என்பதற்காக அவரது நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்ட மத்தேகொட, குடமடுவ வீதி, சிஷில் செவன பூங்காவில் வசிக்கும் நபரை கைது செய்துள்ளதாகக் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

முறைப்பாட்டாளர் மற்றும் மற்றொரு பெண்ணின் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் ஆபாச வீடியோக்கள் அடங்கிய மொபைல் போன் மற்றும் மடிக்கணினியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெற்கு மாகாணத்தைச் சேர்ந்த 26 வயதான புகார்தாரர், மேலதிக கல்விக்காக 2022 ஆம் ஆண்டு ஹோமகமவில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அதே பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது, அவர் சந்தேகநபரை சந்தித்து பின்னர் காதல் உறவை வளர்த்துக் கொண்டவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்

யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி, இலங்கை உள்நாட்டுப்போரின்மனிதஉரிமைமீறல்கள்மற்றும்மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு ஒரு புதிய சாட்சி என்றே கூறவேண்டும். சுமூகமாக மறந்துவைக்கப்பட முற்பட்டவரலாற்றுவன்முறைகளும்,அதனால்பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக் கோரிக்கைகளும் மறுபடியும் உலகப் பார்வைக்கு வந்துள்ளன. இந்த நிலையில், உள்நாட்டு நீதிமுறையில் தமிழ் மக்களுக்கு எப்போதும் நம்பிக்கை இல்லை என்பதையும், நீதிக்கு மாற்றாக மறைமுகமாக பாதுகாப்புக் கலாச்சாரமே மேலோங்கியுள்ளது என்பதையும் மீண்டும் வலியுறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் தீவிரமாகத் தொடங்கியிருக்கும் நிலையில், அதன் மீது கொழும்பு ஆளும்தரப்பு காட்டும் தயக்கம் மற்றும் தெளிவற்ற நடவடிக்கைகள், அதை மறைப்பதற்கான முயற்சிகளாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றன. ஏற்கனவே இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியை வழங்குவதற்கு ஆளும்தரப்பு காட்டும் தயக்கம் தமிழ் மக்களுக்கு இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் அனைத்துலகக் கவனத்தைத் திசை திருப்ப, அரசியல் அறிக்கைகள், போராட்டங்கள் ஆகியவை முன்வைக்கப்படுகின்றன. ஆனால், சிந்துப்பாத்தியில் புதைக்கப்பட்டவர்கள் யார்? எப்போது? யாரால்? என்ற கேள்விகளுக்கான பதில்கள் அவர்களுக்குத் தேவையாகவுள்ளன.

இந்த மாத இறுதியில் திட்டமிடப்பட்டுள்ள மூன்று நாள்கள் தொடர் மக்கள் போராட்டம், தமிழ் மக்களின் நீதி கோரிக்கையின் தொடர்ச்சியை உலகுக்கு நினைவுபடுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகும். ஆனால், இதில் ஆளும்தரப்பு காட்டும் அலட்சியம் மற்றும் மாற்றுப்பதில்கள், அதன் நீதிசார் போக்கு மீதான சந்தேகங்களை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

தேசிய மக்கள் சக்தி போன்ற புதிய அரசியல் இயக்கங்கள்கூட, கடந்த ஆளும்தரப்புகளின் போக்கைவிட, இதுபோன்ற விடயங்களில் மிகுந்த வித்தியாசம்காட்டவில்லைஎன்பதுவருத்தத்திற்குரியது. உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவத்தினரைப் பாதுகாக்கும் போக்கே, தற்போதைய ஆட்சியின் நோக்கத்தை வெளிக்கொணர்கின்றது. செம்மணியிலும் இதே போக்குதான் தொடருவதாகும்.

இதனால்தான் தமிழ் மக்கள் மட்டும் அல்ல, நியாயம் விரும்பும் அனைத்து சமூகங்களும், சர்வதேச குற்றவிசாரணை என்ற ஒரே நியாய பாதையைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஐ.நா., சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) போன்ற அமைப்புகள் இணைந்து நடத்திய விசாரணைகளிலேயே உண்மையும் நீதியும் வெளிவரக்கூடும் என்ற நம்பிக்கையே தக்கவைத்திருக்கின்றது.

நாடும்அரசும்,சர்வதேசவிசாரணையின்அவசியத்தை உணர்ந்து, அதில் ஈடுபட தயாராக இருக்கவேண்டும். அதுவே நீதி, நம்பிக்கை, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் உண்மையான தொடக்கம்.

# சிலரின் வீடுகளுக்குச் செல்லவும் அதிவேக சாலைகளில் பாதைகள்

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் பிமல் சாடல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சிலர் தங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காக இடைமாற்றுபாதைகளைக்கட்டியுள்ளனர் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சமகி ஜன பலவேகய களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அவர் இவ்வாறு கூறினார்.

“தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பலசட்டவிரோத நடவடிக்கைகள் உள்ளன. அந்தச் சாலையில் ஒரே ஒரு ஓய்வுப் பகுதி மட்டுமே உள்ளது. அந்தப் பகுதி முழுவதும் தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதைச் செய்தது ராஜபக்ச ஆட்சிதான். இன்று எங்களைத் திட்டுகிறார்கள். சில இடைமாற்று பாதைகள் அவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்காக கட்டப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட ஓய்வு பகுதிகளைக் கட்ட ராஜபக்ச ஆட்சியின் கீழ் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதற்காக பில்லியன் கணக்கான நிதி வீணடிக்கப்பட்டுள்ளது. வீணான செலவு எங்கள் திட்டங்களில் இல்லை“ என்றார் அவர்.

# பஞ்சிகாவத்தை சூட்டு சம்பவம் மற்றொரு சந்தேகநபரும் கைது

பஞ்சிகாவத்தையில் ஒருவரைச் சுட்டுக்கொல்ல எடுக்கப்பட்ட சம்பவத்திற்கு உடந்தையாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டில் வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டதாக மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்தவர். 30 வயதுடையவர். சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பஞ்சிகாவத்தை பகுதியில், ஜூன் 13 அதிகாலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் ஒரு வீட்டின் அருகே இருந்து துப்பாக்கியால் ஒரு நபரைச் சுட முயன்றனர். துப்பாக்கி இயங்கவில்லை, சந்தேகநபர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

மருதானை பொலிஸாரின் விசாரணைகளைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூடு நடத்திய நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவருக்கு உதவி செய்த மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு 96 மில்லியன் டாலர்களால் அதிகரித்துள்ளது என்று இலங்கை முதலீட்டு வாரிய அதிகாரிகள் நேற்று அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்தனர்.

இலங்கை முதலீட்டு வாரியத்தின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டத்தில் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர். இந்தக் கூட்டம் கொழும்பில் உள்ள அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உள்நாட்டு முதலீடு 21 மில்லியன் டாலர்களாலும், ஏற்றுமதி வருவாய் 176 மில்லியன் டாலர்களாலும் அதிகரித்துள்ளது என்றும், 2025 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கை 4669 மில்லியன் டாலர் வெளிநாட்டு முதலீட்டைப் பெற முடிந்தது என்றும் முதலீட்டு வாரிய அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதில் எதிர்கொள்ளும் சிக்கல்கள், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் குறித்தும் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பேசிய அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, நாட்டின் பொருளாதாரம் மற்றும் கிராமப்புற வாழ்க்கையை உயர் மட்டத்திற்கு உயர்த்தும் முக்கிய பணி இலங்கை முதலீட்டு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக்கூறினார். பாரம்பரிய முதலீட்டுத் துறைகளில் முதலீட்டை ஈர்க்கும் திறன் குறைவாக இருப்பதால், ஒரு நாடாக புதிய முதலீட்டுத் துறைகளை அடையாளம் காண்பது அவசியம் என்றும், இதற்கான பொறுப்பு முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அரசுத் தலைவர் குறிப்பிட்டார்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## யானைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுஅரசதலைவர்இந்தஅறிவுறுத்தல்களை வழங்கினார்.

காட்டுயானைப்பிரச்சினைஅதிகமாகஉள்ள அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை,அம்பாந்தோட்டை,மொனறாகலை, குருநாகல், பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரச்சினைகள் குறித்து அரசாங்க அதிபர்களால் அரச தலைவரிடம் முன்வைக்கப்பட்டன.

வனவிலங்குத் துறையின் தற்போதைய வெற்றிடங்கள், வாகனத் தேவைகள் மற்றும் கடமைகளைமேற்கொள்வதில்எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொறிமுறையை மேலும் திறம்படச்செய்யவேண்டியதன்அவசியத்தை அரச தலைவர் வலியுறுத்தினார், மேலும் மக்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்த திட்டத்தை செயல்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக்காட்டினார். அதன்படி, அடுத்த மாதத்திற்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து பொறுப்பான அதிகாரிகளைக் கொண்ட குழுக்களை நியமிக்கவும்அரசதலைவர்அறிவுறுத்தினார்.

வனவிலங்குத் துறையில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்ப ஓய்வு பெற்ற அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும்அரசதலைவர் அறிவுறுத்தினார். அவசர நடவடிக்கையாக, குறிப்பிட்ட பயிற்சியுடன் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளை வனவிலங்குத் துறையில் இணைக்கவும், இது தொடர்பாக பொருத்தமான சட்டங்களை வகுக்கவும் அரச தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

காட்டு யானைகளின் பிரச்சினையைத் தீர்க்க காவல்துறை, பாதுகாப்புப் படையினர் மற்றும் வனவிலங்குத் துறை இணைந்து மேற்கொள்ளும் தற்போதைய நடவடிக்கைகளை மேலும் முறையாகவும் திறமையாகவும் மாற்றவும் அரச தலைவர் அறிவுறுத்தினார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன, பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, வீடமைப்புத் துறை பிரதி அமைச்சர் சரத், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமநாயக்க, வனவிலங்குத் துறை இயக்குநர் ஜெனரல் ரஞ்சன் மாரசிங்க, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் அரச அதிகாரிகள் குழு இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தமிழ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் காணி அமைச்சர் லால்காந்த கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் கலந்துகொண்டார், விசேட அதிதியாக வட மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றியபோது அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார் என அவரது அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் வாழ முடியாது என்ற மனோநிலை எமது இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதனால் கல்வி மற்றும் வேலைகளுக்காகவெளிநாடுசெல்லவேண்டும் என்ற நிலையில் உள்ளனர்.

மறுபுறத்தில் பிறப்புவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1981காலப்பகுதியில் 8 இலட்சத்துக்கு மேல் இருந்த யாழ்.மாவட்ட சனத்தொகை தற்போது 6 இலட்சம் வரைதான் உள்ளது.

முன்னர் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். இன்று யாழ். மாவட்டத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவாகின்றனர். அடுத்த தேர்தலின்போது இதுமேலும் குறைவடையக்கூடும். ஏனெனில் புலம்பெயர்வு அதிகரித்துள்ளது.

வடக்கை முன்னேற்றுவது பற்றி, விவசாயம் உள்ளிட்ட தொழில்துறைகளை மேம்படுத்துவது பற்றி கடந்த காலங்களில் கவனம் செலுத்தப்படாமையும் இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி உருவாகக் காரணமாக அமைந்தது.

இந்நிலைமையை மாற்றியமைக்கவே நாம் வந்துள்ளோம். வடக்கு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விவசாயத்தை மேம்படுத்த வியூகம் வகுக்கப்பட்டுள்ளது. வடக்கு மக்கள் பற்றி சிந்திக்கக்கூடிய தலைவர் நாட்டின் ஜனாதிபதியாக உள்ளார். அதனால்தான் பாதீட்டில்கூட கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்பும்போது அதன் கம்பீரத்தை எடுத்துக்காட்டும் வகையில் நிர்மாணங்கள் இடம்பெறவேண்டும் என அரச தலைவர் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே, தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம்;. மக்கள் கைவிட்டால்கூட, மக்களுக்காக செய்ய வேண்டிய திட்டங்களை நிச்சயம் நாம் செய்வோம் - என்றார்.

## வாகரைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபையில் பந்து சின்ன சுயேச்சைக் குழுவும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பும் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றின. மட்டக்களப்பில் கிழக்கு கூட்டமைப்புக் கைப்பற்றிய இரண்டாவது சபை இதுவாகும்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை சேர்ந்த தெய்வேந்திரன் வாகரை பிரதேச சபை தவிசாளராகவும், ரசிகரன் பிரதித் தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வாகரை பிரதேச சபையின் தலைமைப் பதவியைக்கைப்பற்றுவதற்காக, பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு தேசிய மக்கள் சக்தி ஆதரவளித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்சாணக்கியன்குற்றம்சாட்டியுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் (யீ) சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிள்ளையானின் வேட்பாளரை ஆதரித்து, தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடிக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்தனர் என்று அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் தேசிய மக்கள் சக்தி எந்தவொரு நிலையான கொள்கையுடன் செயல்படவில்லை என்பது தெளிவாகிறது எனவும் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்காக, தேசிய மக்கள் சக்தி பிள்ளையானின் கிழக்கு கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியிருந்தது அண்மையில் நடந்த நாடாளுமன்ற அமர்வின்போதும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

கிழக்குப்பல்கலைக்கழக துணைவேந்தர் படுகொலை மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படடுள்ளார்.

## வாகன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீவலி அருகொட தெரிவித்தார். கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருவாய் காரணமாக சுங்கத்துறை தனது வருவாய் இலக்குகளை மீறும் திறன் கொண்டதாகக் மாறியுள்ளது என்று கூறிய அருக்கொட, 2025 ஆம் ஆண்டுக்கு ரூ. 2,115 பில்லியன் வருவாய் இலக்கை எட்ட முடியும் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டு ரூ. 1,533 பில்லியன் வருவாய் இலக்கு குறிக்கப்பட்டதாகவும், அந்த இலக்கைவிட 2 பில்லியன் அதிக வருவாய் ஈட்டப்பட்டதாகவும், இந்த ஆண்டு ஜூன் மாத நடுப்பகுதியில் ரூ. 900 பில்லியனுக்கும் அதிகமான வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் வாகனங்களை இறக்குமதி செய்ய ஆளும்தரப்பு அனுமதித்தது. அன்றிலிருந்து சுமார் 14,000 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன, இதன் மூலம் சுமார் 165 பில்லியன்ரூபாய்வருமானம்ஈட்டப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த ஆண்டு வாகனங்கள் இறக்குமதி மூலம் மட்டும் 450 பில்லியன் ரூபாய் சம்பாதிக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக அருக்கோட மேலும் தெரிவித்தார்.

## புதிதாகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியிருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் ஏமாற்றும் வகையிலேயே கெஹெலியரம்புக்வெல்லஉள்ளிட்டகுழுவினர் செயற்பட்டிருக்கின்றனர்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய அவருக்கு விரைவில் உரிய தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## நிதி துணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்றஉறுப்பினர்பதவியிலிருந்து விலகியுள்ள சூரியப்பெரும, நிதி அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட உள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

நிதி அமைச்சின் செயலாளர் பதவியை வகித்த மஹிந்த சிறிவர்தன, சமீபத்தில் ஓய்வு பெற்றார், அவர் ஆசிய வளர்ச்சி வங்கியில் இயக்குநர் பதவியைப் பெற இருக்கிறார்.

சூரியப்பெரும பட்டய மேலாண்மை கணக்காளர்கள் நிறுவனத்தின் (ஸீணுனிபு) உறுப்பினராகத் தகுதி பெற்றவர். மற்றும் மேலாண்மை முதுகலை நிறுவனத்தில் எம்பிஏ (ஸிரியபு) பட்டத்தையும், மேலாண்மை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில் வணிக வலையமைப்பு மற்றும் செயல்திறன் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

தனியார் துறையில் நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான பல நிறுவனங்களில் பணியாற்றியுள்ள இவர், 2013 முதல் 2021 வரை இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தில் நிறுவன விவகாரஇயக்குநராகவும்பணியாற்றியுள்ளார்.

2022 முதல் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரச் சபை உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்றஉறுப்பினராகநியமிக்கப்பட்டார்.

பதவி விலகல் தொடர்பில் ஹர்ஷன சூரியப்பெருமாவை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

## இனுவிலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சமூகச்செயற்பாட்டாளர்களான கோகிலன், சித்தார்த்தன், வத்சாங்கன், சிவசங்கர், நவநீதன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி நவநீதன் தாக்கல் செய்த மனுவின் மீது நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தக் குப்பை சேமிக்கும் இடத்தில் மருத்துவ மற்றும் இலத்திரனியல் குப்பைகள் கொட்டப்படுவதும் எரிக்கப்படுவதும் இந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டையும் நிலத்தடி நீர் மாசுபாட்டையும் ஏற்படுத்துவதால் இந்த இடத்தில் குப்பை கொட்டப்படக்கூடாது என்று மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

இது தொடரபில் சம்பந்தப்பட்ட அனைத்து அரச அலுவலர்களிடமும் முறையிட்டும் பயன் ஏதும் கிட்டாத நிலையில், மனுதாரர்கள் நீதிமன்றத்தை நாட்டியிருந்தனர். அவர்களின் வாதங்களையும் சான்றாதாரங்களையும் பரிசீலித்த பின்னர், அந்த இடத்தில் தொடர்ந்து குப்பை கொட்டுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த குப்பைகளை அகற்றி அங்கு குப்பை கொட்டுவதை நிறுத்தும்படி கோரி மக்கள் யாழ்ப்பாணம் செயலகம் முன்பாகப் போராட்டமும் நடத்தியிருந்தார்கள். ஆனால், அரச அதிகாரிகள் நல்லூர் பிரதேச சபையின் நடவடிக்கையைநிறுத்தத்தவிதமுயற்சிகளும் செய்யவில்லை.

சட்டத்தரணி நவநீதன் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி பிரச்சனை ஒரு பொதுத் தொல்லையாக இருப்பதாகவும் சூழல் மாசடையக் கூடிய வகையில் இது காணப்படுகின்றது என்றும் வாதாடினார். யாழ். மாவட்ட நீதிபதி லெனின் குமார் குப்பைகள் கொட்டப்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்துக் கட்டளையிட்டார்.

## வாகன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி இதனைத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு 44ஆம் எண் பொது நிதி மேலாண்மைச் சட்டத்தின் பிரிவு 11இன் படி, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 அல்லது அதற்கு முன்னர் நிதி மூலோபாய அறிக்கையை அறிவிக்க வேண்டும் என்ற தேவையை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றம் இவ்வாறு கூடும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, பிரதமரின் வேண்டுகோளின் பேரில், நாடாளுமன்றத்தின் 16 ஆம் எண் நிலையியற் கட்டளைகளின்படி, ஜூன் 30 காலை 9.30 மணிக்கு சபாநாயகர் நாடாளுமன்றத்தைக் கூட்ட உள்ளார். இது தொடர்பாக ஆளும்தரப்புக் கொண்டுவரும் ஒத்திவைப்பு விவாதத்தை அன்றைய தினம் மாலை 4.30 மணி வரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# தென்னாபிரிக்க தூதர் சபாநாயகருடன் சந்திப்பு

இலங்கைக்கான தென்னாப்பிரிக்க உயர் ஆணையர் சாண்டில் எட்வின் ஷால்க் மற்றும் சபாநாயகர் டாக்டர் ஜகத் விக்ரமரத்ன ஆகியோருக்கு இடையே நாடாளுமன்றத்தில் ஒரு சந்திப்பு நடைபெற்றது.

இலங்கை 1994 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதாக சபாநாயகர் வலியுறுத்தினார், மேலும் கலந்துரையாடலின் போது, வர்த்தகம், சுற்றுலா மற்றும் குடிமக்கள் உறவுகள் ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சபாநாயகர் வலியுறுத்தினார்.

தென்னாப்பிரிக்க நல்லிணக்க பொறிமுறையானது அமைதியின் முக்கியத்துவம் குறித்து உலகிற்கு ஒரு வலுவான செய்தியை அனுப்புகிறது என்றும், இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்காக தென்னாப்பிரிக்க அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பதாகவும் சபாநாயகர் கூறினார்.

தென்னாப்பிரிக்க -ஆளும்தரப்பின் தொடர்ச்சியான சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை உயர் ஆணையர் விளக்கினார், அவை நல்லிணக்க வழிமுறைகளை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகக் கூறினார்.

# கெஹலியவின் மகள் பிணையில் வந்தார்

சந்தேகத்திற்கிடமான 16 வங்கிக் கணக்குகளில் ரூ.90 மில்லியனுக்கும் அதிகமான வைப்புத்தொகையை கணக்குக்காட்ட முடியாமல் வைத்திருந்தனர் என்பதற்காகக் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகள் சமித்ரி ஜனனிகா ரம்புக்வெல்ல, பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் ரூ.50,000 ரொக்கப் பிணை மற்றும் தலா ரூ.5 மில்லியன் மதிப்புள்ள மூன்று பிணைகளை சமர்ப்பித்த பின்னர் நேற்றுப் பிணையில் வெளியேறினார்.

# 15 எம்.பிக்கள் சீனா பயணம்

அரசமற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சீனாவிற்கு ஆய்வுச் சுற்றுலாவிற்காக புறப்பட்டனர்.

நாடாளுமன்றத்தின் துணைச் செயலாளர் நாயகமும், தலைமைப்பணியாளர்சட்டத்தரணியுமானசமிந்தகுலரத்ன மற்றும் மூன்று அதிகாரிகளும் இந்த சுற்றுப்பயணத்தில் பங்கேற்கின்றனர்.

உறுப்பினர்கள் தங்கள் ஆய்வுக்காக ஒரு வாரத்திற்கும் மேலாக அங்கு தங்கியிருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது பல்வேறு ஆய்வு நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்பு வழங்கப்படுகிறது. பல்வேறு சர்வதேச அமைப்புகள் இந்தப் பயணங்களுக்கு நிதியுதவி செய்கின்றன.

# பலாங்கொடை பிரதேச சபையின் என்பிபி தவிசாளர் பதவி விலகல்

தேசிய மக்கள் சக்தி கட்சியால் பலாங்கொடை பிரதேச சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ரஞ்சித் உதயகுமார, தனிப்பட்ட காரணங்களுக்காக ஒரு மாத காலத்திற்குள் உறுப்பினர் மற்றும் தவிசாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவரது பதவி விலகலால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப தேசிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து ஆரியதாச காமா எத்தகே தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எத்தகே, சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்.

# லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் புதிதாக காமா கேமரா அலகு திறப்பு

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் நிறுவப்பட்ட புதிய காமா கேமரா அலகு, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர், நிபுணர் டாக்டர் அனில் ஜாசிங்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அதிநவீன காமா கேமரா அலகுக்கு சுகாதார அமைச்சின் ரூ. 154 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சாதனம் நோய்களைக் கண்டறிவதற்கு, முக்கியமாக சிறுநீரக நோய்களைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையில் இதுவரை இந்தப் பரிசோதனைகளுக்காக நிறுவப்பட்ட இயந்திரம் 20 ஆண்டுகளுக்கும் மேலானது மற்றும் அவ்வப்போது செயலிழந்து வருகிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

இந்த இயந்திரம் கொழும்பு தேசிய மருத்துவமனை, கராப்பிட்டிய தேசிய மருத்துவமனை மற்றும் பேராதனை போதனா மருத்துவமனையிலும் நிறுவப்பட்டுள்ளதாகவும், இது நோயாளி பராமரிப்பு சேவைகளை திறம்பட வழங்க உதவும் என்றும் சுகாதார அமைச்சகம் கூறுகிறது.

# பலத்த பொலிஸ் காவலுக்கு மத்தியில் காலி மாநகர சபை தவிசாளர் தெரிவு

காலி மாநகரசபையின் மேயர் தெரிவை இரகசியமாக நடத்த எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வெறியேறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக பொலிஸார் சபா மண்டபத்திற்குள் வரவழைக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடனேயே தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. அதில் என்பிபி வெற்றி பெற்றது.

என்பிபியின் அல்விடிகல இஹல கமகே சுனில் 19 வாக்குகளைப் பெற்று காலி மாநகரசபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இலங்கை பொதுஜன பெரமுனவின் பிரியந்த சஹாபந்து, கடுமையான போட்டியின் மத்தியில் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காலி மாநகரசபையின் தொடக்கக்கூட்டம் நேற்றுக் காலை 9.00 மணிக்கு காலி மாநகர சபை கூட்ட மண்டபத்தில் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையர் எராண்டி உமங்கா மெண்டிஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், காலி மாநகர சபையின் மேயர் பதவிக்குஐக்கிய மக்கள் சக்தி கட்சி முகமது மௌசுன் முகமது ரோஷனின் பெயரை முன்மொழிந்தது. தேசிய மக்கள் சக்தி எல்விடிகல இஹல கமகேவின் பெயரை முன்மொழிந்தது.

மேயர் இரகசிய வாக்கெடுப்பு மூ-லமா திறந்த வாக்கெடுப்பு மூலமா தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை அறிய இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது, இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஆதரவாக 19 உறுப்பினர்கள் வாக்களித்தனர். திறந்த வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஆதரவாக 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய பெரமுனவின் ஆகியவற்றின் 16 உறுப்பினர்கள் மன்றத்தை விட்டு வெளியேறினர். இதனால் மன்ற அறையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும், இலங்கை பொதுஜன பெரமுனவின் மூன்று உறுப்பினர்கள் மன்ற அறையிலேயே இருந்தனர். தென் மாகாண உள்ளூராட்சி ஆணையர் மன்றக் கூட்டத்தை 30 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

மன்றக்கூட்டம் மீண்டும் தொடங்கிய பிறகு, மேயரைத் தேர்ந்தெடுப்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்தத் தேர்தலில், தேசிய மக்கள் கட்சியின் அல்விடிகல இஹல கமகே சுனில் 19 வாக்குகளுடன் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டது.

இந்தக் குழப்பம் காரணமாக, வளாகத்திற்குள் சிறப்பு போலீஸ் படை வரவழைக்கப்பட்டது.

காலி மாநகரசபையின் மேயர் மற்றும் துணை மேயரை நியமிப்பதற்காக நேற்று நடைபெற்ற தேர்தலின் போது கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயல்பட்டதற்காக, காலி மாநகர சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் பிரியந்த கொடகம சஹாபந்து உடனடியாக கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

தேர்தலின் போது கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்பட்ட உறுப்பினர் துணை மேயர் பதவிக்குப் போட்டியிட்டார் என்றும், அவர் அனைத்து கட்சிப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டார் என்றும் செயலாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக முறையான குற்றப்பத்திரிகைதாக்கல் செய்யப்படும் என்று சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2025இல் வெளியிடப்பெற்றது